**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 04-11-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-11-04 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-11-05 | 2022-11-06 | 2022-11-07 | 2022-11-08 | 2022-11-09 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 35.0 | 10.0 | 12.0 | 7.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 29.0 | 31.0 | 31.0 | 32.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 25.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 65 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 8.0 | 10.0 | 10.0 | 10.0 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 50 | 50 | 20 | 20 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 5 | 5 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

நவம்பர் 05 அன்று கனமழைக்கு வாய்ப்பு மற்ற நாட்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது .அதிகபட்ச வெப்ப நிலை 29.0°C - 32.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 24.0°C - 25.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 08 - 10 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : நவம்பர் 05 முதல் நவம்பர் 10 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்புக்கு மேல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்.

## குறுஞ்செய்தி :

மழை எதிர்பார்க்கப்படுவதால் தற்போது தாளடி நடவுக்கு தாயார இருக்கும் நாற்றங்கால் முறையான வடிகால் வசதி செய்து அமைத்து நாற்றங்காலில் சேதத்தை தவிர்க்கவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மக்காச்சோளம் | தற்போது மக்காசோளம் நடவுசெய்துள்ள விவசாயிகள் 1 ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்டம் அல்லது 10 கிலோ சிங்க்சல்பேட் உரத்தினை கொடுப்பதன் மூலம் நுண்ணூட்ட சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம். மேலும் மக்கிய தொழுஉரத்துடன் ஏக்கருக்கு 2கிலோ அசோஸ்பைரில்லம் 2 கிலோ பாஸ்போ பாக்டீரியாவை கலந்து இடவேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கத்திரிக்காய் | பருவமழைக் காலங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் சமயங்களிலும் கத்தரி பயிரில் இலைப்புள்ளி நோயின் தாக்கம் அதிகமாகக் காணப்படும். இந்நோய் பரவலைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருணீ க்கு 10கிராம் அல்லது 10மில்லி என்ற அளவில் சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ்னை கலந்து தெளிக்க வேண்டும். ரசாயண முறையில் இதனைக் கட்டுப்படுத்த டைத்தேன் எம்45 பூசண கொல்லியினை ஒரு லிட்டர் தண்ணீருணீ க்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும் |
| வாழை | அதிக மேகமூட்டம் மற்றும் காற்றின் ஈரப்பதம் காரணமாக வாழைத்தாரில் சிகரெட் நுனி சாம்பல் அழுகல் தென்பட வாய்ப்புள்ளதால் கவனித்து தேவைப்பட்டால் மேன்கோசெப் மருந்தினை 2 கிராம் அளவில் கலந்து தெளிக்கவும் . |
| பூசணி | பருவமழை தொடங்கியுள்ளதால் மழை காலங்களில் மழையை தாங்கி வளரும் பயிர் கானா கத்தரி ,வெண்டை ,பூசணி ,பாகல் , சாம்பல் பூசணி, வெள்ளரி ,சுரை ,அவரை ,தவசிக்கீரை தண்டு க்கீரையில் பூசா கிரன் என்ற இரகம் போன்றவை மழையை ஓரளவு தாங்கி வளரக்கூடியது. பயிர்களை பயிர் செய்வதற்கு முன் சரிவுக்கு குறுக்கே அகலப்பாத்திகளை அமைத்து இடையில் அகனற நீள் பள்ளங்களை 0.5 % சரிவில் அமைக்கவேண்டும் .இதனால் வடிகால் வசதி கூடுகிறது . பயிர்களை பாத்திகளில் விதைக்க வேண்டும் நீள் பள்ளம் அதிக மழைநீரில் வழிந்தோடும் செய்கிறது. |
| வாழை | எதிர்பார்க்கும் மழையைப் பயன்படுத்தி தோட்டக்கால் நிலங்களில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடவு செய்யும் வாழை பயிரில் நூற்புழு தாக்குதலைத் தடுக்க தோல் சீவிய கன்றுகளை சேற்றுக் குழம்பில் நனைத்து அதன்மேல் 40 கிராம் கார்போ பியூரான் சீராக தூவி நடவு செய்ய வேண்டும் . திசு வளர்ப்பு முறையில் உருவாக்கப்பட்ட 5-6 இலைகள் உடைய கன்றுகளை , கன்றுக்கு 25 கி சூடோமோனாஸ் புளூரசன்ஸ் இட்டு நடவு செய்ய வேண்டும் |
| தென்னை | அதிக காற்று ஈரப்பதம் காரணமாக இளம் தென்னை மரங்களில் குருத்தழுகல் நோய் தாக்குதல் அதிகமாக தென்படுவதால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மருந்தினை தெளிக்கவும் . |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பருவமழை காலங்களில் அடர் தீவனம் சேமிப்பு முறைகள் : அடர் தீவனமான மக்காச்சோளம்,கம்பு ,புண்ணாக்கு மற்றும் தவிடு வகைகளை ஈரம் படாமல் சேமிக்க வேண்டும். தீவன மூட்டைகள் மரக்கட்டைகளில் அடுக்கி வைத்தல் வேண்டும் . சுவற்றை ஒட்டி தீவன முட்டைகளை சேமிக்கக் கூடாது . தீவன அறைக்குள் காற்று புகாமல் இருத்தல் வேண்டும் அடர் தீவன தயாரிப்பு 15 நாட்களுக்கு ஒரு முறை மட்டும் மழைக்காலங்களில் செய்தல் நல்லது தானிய வகைகளான மக்காச்சோளம் ,கம்பு ,மற்றும் கடலை , எள்ளு புண்ணாக்கு , ஆகியவற்றை நன்கு காயவைத்து பின் அரைத்து சேர்க்க வேண்டும் (ஈர்ப்பதம் மிகவும் குறைவாக இருத்தல் வேண்டும். |
| வெள்ளாடு | Due to the prevailing weather, external parasites may attack your goats and sheep. To protect your livestock from these external parasites, mix 2ml of Butox with one litre of water and apply the solution on the outer body of the sheep. This medicine should not be used internally. |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | மழை எதிர்பார்க்கப்படுவதால் அறுவடை செய்த நெல் மணிகளை உலர்வான இடங்களில் நெல் மணிகளை சேமிக்கவும் . மழை நீர் தேங்காத வண்ணம் நல்ல வடிகால் வசதி அமைத்து கொடுக்கவும். தொடர்ந்து மழை எதிர்பார்க்கப்படுவதால் காலையில் மலர்களை அறுவடை செய்ய சிரமமாக இருப்பின் மாலை நேரங்களில் அறுவடை செய்து கொள்ளலாம். |